**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 06.11.2025**
**OS. No. 27/2015 and OS.No.122/2015**
**வழக்கு சாட்சி DW.3–மாரியப்பன் , த/பெ.செட்டியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் மேச்சேரி கிராமத்திலுள்ள சீராமணியூர் காட்டுவளவில் தோப்புக்காட்டில் குடியுள்ளேன். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டதா என்றால் இல்லை. பிரதிவாதி இந்திராணி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். சண்முகத்திற்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். அவரது முதல் மனைவியின் பெயர் பொண்ணி ஆகும், அவர்களுக்கு கோவிந்தராஜ் மற்றும் அண்ணாமலை என இரண்டு மகன்கள் உள்ளனர். இரண்டாவது மனைவி பெயர் வெள்ளையம்மாள், அவர்களுக்கு மூன்று மகன்கள் ஒரு மகள் உள்ளனர். அவர்களது பெயர்கள் சந்திரசேகர், குணசேகர், பெரியகவுண்டர், பெருமாயி ஆகும்.

2) நான் சண்முகத்திற்கு உறவினரா என்றால் இல்லை, அவர் எனக்கு பழக்கமானவர். என் வீட்டிற்கும், சண்முகத்தின் வீட்டிற்கும் சுமார் 1/2 கி.மீட்டர் தொலைவு இருக்கும். என் நிரூபண வாக்குமூலத்தில் சண்முகம் என்பவர் நிலத்தை அடமானம் வைத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், கோவிந்தராஜ் நிலத்தை அடமானம் வைத்தார், அதை சண்முகம் மீட்டதாக நான் சொல்லியுள்ளேன். அந்த அடமானம் வைத்த நிலமானது சீராமணியூர் காட்டுவளவில் தான் உள்ளது. அதன் சர்வே எண் மற்றும் அடமானம் வைத்த தேதி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, 1 ஏக்கர் நிலம் என்று தெரியும். அந்த 1 ஏக்கர் நிலம் ஒரே நிலமா என்றால் ஆமாம். அந்த நிலத்தின் சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. இந்திராணி குடியுள்ள வீடு எந்த வருடம் கட்டப்பட்டது

என்றால் அது பழைய ஓட்டு வீடு சுமார் 40 வருடங்கள் இருக்கலாம். நான் இந்திராணிக்கு உறவுமுறையா என்றால் இல்லை, பழக்கம் தான்.

3) சண்முகம் உயில் எழுதி வைத்ததாக வாதிகள் சொல்வது குறித்து எனக்கு தெரியுமா என்றால் ஊரில் பேசிக்கொண்டார்கள். அந்த உயிலில் உள்ள விவரங்கள் நான் தெரிந்து கொண்டேனா என்றால் வெள்ளையம்மாள் அவர்களுக்கு தான் சொத்து என்று எழுதி வைத்துள்ளார். வெள்ளையம்மாள் பிரச்சனை செய்ததாக நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது எந்த தேதி, வருடம் என்றால் எனக்கு தெரியாது ஊரில் பேசிக்கொண்டார்கள். கோவிந்தராஜ் எந்த வருடம் இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியும், 10.05.1992 ம் தேதியில் இறந்துவிட்டார்.

4) இந்திராணிக்கு அருண்குமார் மற்றும் கவிதா என்று இரு பிள்ளைகள் உள்ளனர். கோவிந்தராஜ் இறந்த பிறகு அடமானம் மீட்கப்பட்டதா அல்லது அவர் உயிருடம் இருந்தபோது மீட்கப்பட்டதா என்றால் அவர் உயிருடன் இருந்போதே நிலம் மீட்கப்பட்டது. நிலம் மீட்டு எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 30 வருடம் இருக்கும். அந்த சமயத்தில் இந்திராணியின் மகன் அருண்குமாருக்கு என்ன வயது என்றால் சுமார் 12, 13 இருக்கும். தற்போது அருண்குமாருக்கு வயது சுமார் 40 இருக்கும். இந்திராணி ஏதேனும் வேலைக்கு சென்றாரா என்றால் இல்லை.

5) அடமானம் யாரிடம் வைக்கப்பட்டது என்றால் வெள்ளையம்மாளிடம் வைக்கப்பட்டது. அவர் தற்போது உயிருடன் தான் இருக்கிறார். என் நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். அதிலுள்ள சங்கதிகளை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அதில் OS.No.27/2015 ன் 1ம் பிரதிவாதியும் OS.No.122/2015ன் 2ம் வாதியுமான இந்திராணி வணக்கமாய் தாக்கல் செய்யும் கூடுதல் நிரூபண பிரமாண பத்திரிக்கை DW3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6) மேலும் அதை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்திருந்தால், நான் தயார் செய்ததது போல் இருந்திருக்கும் என்றும், இந்திராணி தயார் செய்து அதில் நான் கைொப்பம் செய்துள்ளதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றியும், உயில் பற்றியும் எதுவும் தெரியாது என்றும், இந்திராணி கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.